"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்". தாபிதம்: 1876

சத்தியவேத பாதுகாவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

சத்தியவேத
பாதுகாவலன்
வருடசந்தா
இலங்கை: வெளிநாடுகள்:
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)
தனிப்பிரதி சதம் 15

89-ம் புத். | யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு ஆடிமீ 18-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 28-ம் இல.

# யேசுவின் சிறியபுஷ்பத்தின் பெற்றோர் திருப்பட்டம் சூடுவரா?

லிசியேபதி, அர்ச். தெரேசம்மாளின் பெற்றோர் ஒருநாள் அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பெற்று, திருச்சபையால் அர்ச்சியசிட்டர்களெனப் பிரகடனஞ்செய்யப்பட்டுள்ள புனிதர்களின்கூட்டத்திலே தங்கள் செல்வப்புதல்வியுடன் போய்ச்சேர்ந்துகொள்வார்களென எதிர்பார்க்கலாம். திருச்சடங்காசார திருச்சங்கம் இப்போது அவள்பெற்றோரான லூயிஸ் மாட்டீன், அசெலி மாட்டீன்எனும் இருவரும் எழுதியுள்ள சாசனங்களைப் பரிசிலனைசெய்து, அவற்றில் வேதவிசுவாசத்திற்கும், அறநெறிகளுக்கும் எதிரிடையானவை ஏதொன்றுமில்லையெனக் கண்டறிந்திருக்கிறது. முத்திப்பேறுபெற்றபட்டமும், காலகதியிலே அர்ச்சியசிட்டபட்டமும் சூட்டுவதற்கு ஆவசியகமான நடவடிக்கைகளிலே இதுஒன்றாகும்.

லூயிஸ் மாட்டீன் பிரான்சிலே போடோநகரில் 1823-ம்வருடம் ஆடிமாதம் 22-ந்திகதியன்று பிறந்தார். பட்டாளஅதிகாரிஒருவரின் புதல்வரானஇவர் ஓர் இளைஞராயிருந்த காலத்தில் பிரான்சிலே அநேகபட்டணங்களில் சஞ்சரித்திருந்து, இங்கிலாந்திலே கடிகாரஞ் செய்யப் பயின்றுகொண்டார். பின்னர் அங்கிருந்து பிரான்சுக்குத் திரும்பி அலென்கன் நகரிலே ஒரு கடிகாரச்சாய்ப்பைத் திறந்தார். 1858-ம்ஆண்டு அசெலி கெறினைத் திருமணஞ்செய்துகொண்டார். இவர்களின்பிள்ளைகளில் ஆகஇளையவள்தான் அர்ச். தெரேசம்மாள்.

அசெலி கெறின் 1831-ம்ஆண்டு மார்கழி24-ந்திகதியன்று பிறந்து, அலென்கன்நகரப் பாடசாலைஒன்றில் கல்விபயின்றாள். இவள் லிசியேபதியில் 1877-ம்ஆண்டு ஆவணிமாதம் 28-ந்திகதி மரணமடைந்தாள். இங்குதான் அவள்கணவரும் 1894-ம்ஆண்டு ஆடிமாதம் 29-ந்திகதி மரணமடைந்தார். லிசியேபதியில்தான் இருவரும்ஒருங்கே அடக்கஞ்செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்பதியில்தான் அர்ச். தெரேசம்மாள்உட்பட அவர்களின் மூன்று புதல்விகள் கார்மேல்சபைக் கன்னியாஸ்திரிகளாய் இருந்தார்கள். அர்ச். தெரேசம்மாளும் தனது 24-ம்வயதிலே 1897-ம்ஆண்டு லிசியேபதியில் மரணமடைந்தாள். இவளின் முத்திப்பேறுபெற்றபட்ட விசாரணை 1910-ம்ஆண்டு தொடங்கியது. பின்னர்அவள் 1923-ம் ஆண்டு முத்திப்பேறுபெற்றபட்டமும், இருவருடங்களின்பின் அர்ச்சியசிட்டபட்டமும் சூட்டப்பெற்றாள்.

## 12-ம் பத்திநாதரின் நீதிக்குரல்

2-ம் உலகமகா யுத்தகாலத்தில் பாப்பரசராயிருந்த 12-ம் பத்திநாதரைப்பற்றி சில கொம்யூனிஸ்த பத்திரிகைகள், அவர் ஹிட்லருக்குப் பயந்திருந்தவரென்றும், அதனால் ஹிட்லரின் யூதவதையைப் பொருட்படுத்தவில்லையென்றும் நஞ்சுகக்கி மக்களை ஏமாற்றி வந்திருக்கின்றன. இக்கூற்றுக்கள் எவ்வளவு அநீதியானவையென்றுகாட்டி கத்தோலிக்க பத்திரிகைகள் பன்முறையும் எழுதி வந்திருக்கின்றன. கொம்யூனிஸ்தர்கள்கூறும் இந்த அபாண்டங்களைச் சமீபகாலத்தில் இத்தாலிய வெளிவிவகார மந்திரியாராகிய சறகாட் என்பவர் ஆணித்தரமாகக் கண்டித்துக் கூறியிருக்கின்றார்: "ஹிட்லரின் வெற்றிக்குரல் ஐரோப்பாவில் ஒலித்துக்கொண்டிருந்த அக்காலத்தில் நீதியையும், மனித உரிமைகளையும் எடுத்துக்கூறிய ஒரு குரல் இருந்ததாயின் அது 12-ம்பத்திநாத பாப்பரசரின் குரலே" என இம்மந்திரியார் கூறியிருக்கின்றார்.

## 'ஓதொடக்ஸ்' சபையினரின் மகிழ்ச்சி

அண்மையில் 6-வது சின்னப்ப பாப்பரசர் கிரேக்க 'ஓதொடக்ஸ்' சபையினருக்கு கிரேக்கதேச அப்போஸ்தலராகிய அர்ச். பிலேந்திரரின் கபாலஓட்டை அனுப்பிவைக்கச்செய்த முடிவுபற்றி அந்நாட்டில் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. "கிறீஸ்தவசபைகளின் ஒற்றுமை உச்சிக்கு ஏறிச்செல்ல உதவும்படிகளுள் ஒன்று", என இதுபற்றிப் பேசிக்கொள்கின்றனர்

மேலும், கிழக்குப்பாக 'ஓதொடக்ஸ்' சபையினர் சகலரையும் ஒரு மகாநாட்டுக்குவர கொன்ஸ்தாந்திநோப்பிள் பத்திரியாக்காகிய அத்தனகோரஸ் ஆண்டகையவர்கள் அழைப்பு அனுப்பியிருக்கின்றார்கள். இம்மகாநாடு றோட்ஸ்தீவிலே இவ்வருடம் புரட்டாசி மாதத்தில் கூட்டப்பட இருக்கின்றது. இதன்நோக்கம், றோமன்கத்தோலிக்க சமயத்துடன்சேர்ந்துஇயங்க வழிவகைகளை ஆராய்வதே. இத்தகைய மகாநாடு ஒன்றில் சென்றவருடம் கிரேக்க ஓதொடக்ஸ் பிரிவினர் கலந்துகொள்ள மறுத்துவிட்ட பொழுதும் பின்னர் மகாநாட்டின் முடிவுகளை ஏற்றுக்கொண்டதும், இவ்வருட மகாநாட்டுக்கு அனுப்பப்பட்ட அழைப்பை ஏற்றுக்கொள்ள சூழ்நிலை சாதகமாக இருப்பதும் மகிழ்ச்சிக்குரிய நற்குறிகளே. இந்நிலையில் பாப்பரசரின் அன்புக்கொடை சூழ்நிலையை மேலும் மிருதுவாக்கும் என்பதில் ஐயமில்லை.

## பூசைப் பரிசாரகரைப் போற்றுகிறார் பரி. பாப்பரசர்

அர்ச். ஜோண் பேக்மன்ஸ் தினத்தன்று றோமாபுரிப்பூசைப் பரிசாரகர் சங்கத்தைச் சேர்ந்த இளைஞர் 3000பேர் பாப்பரசரைத் தரிசிக்கச்சென்றிருந்தனர். அவர்களைப்பார்த்துப் பாப்பரசர் "றோமாபுரியின் மேற்றிராணியார்என்ற பான்மையில் எனக்கு நீங்கள் பெரும்ஆறுதல் அளிக்கின்றீர்கள். இந்தஆறுதலை நான் பெறக்காரணமாகிய உங்களுக்கும் உங்களது பெற்றோர், பங்குக்குருமார், ஆசிரியர்களுக்கும் எனது நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்குச் சுருக்கமாகக்கூறும் புத்திமதி இதுவே. உங்களது சேவை ஒரு அப்போஸ்தொலிக்க சேவை. உங்களைப் பார்ப்பவர்கள்மனதில் தேவபக்தி தூண்டப்படத்தக்கதாக நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். உள்ளும்புறமும் தூய்மையாய் இருக்கவேண்டும். நீடித்தசடங்குகளில் பங்குபெற நேரிட்டால் நீங்கள் களைத்துவிடப்படாது. நீங்கள் யாவரும் பங்குபெறும் சடங்குகளின் அர்த்தத்தை விளங்கிக்கொள்வது உங்களது அப்போஸ்தொலிக்க சேவைக்கு அவசியம்", என்றுகூறி தமது ஞாபகசின்னங்களை அவர்களுக்கு அளித்து ஆசீர்வதித்து அன்புடன் வழியனுப்பி வைத்தார்.

## ஆண்டொன்று கழிந்தபோதிலும்

அருளப்பபாப்பானவர் மரணத்திரையில்மறைந்து ஆண்டொன்று கழிந்தபோதிலும் அவர்பெயருக்கு முகவரியிட்டகடிதங்கள் இன்னுமே உலகமுழுவதிலுமிருந்து றோமைநகர் போய்ச் சேர்ந்தவண்ணமிருக்கின்றன. அவற்றிலேசில அவரின் செபங்களை வேண்டிநிற்கின்றன. சில அவரிடம் பாவசங்கீர்த்தன வேண்டுகோள் விடுக்கின்றன. சில அவர்பால்கொண்டுள்ள அன்பின் பெருக்கை வெளியிடுகின்றன. ஏனையவைகள் 'பெற்றுக்கொண்ட அருள்க"ளுக்காக நன்றிதெரிவித்து எழுதப்பட்டிருக்கின்றன.

ஆனால், சிலகடிதங்கள் மட்டுமே வத்திக்கான்இராச்சிய காரியதரிசியின் காரியாலயம்போய்ச் சேருகின்றன. பெரும்பாலானவைகள் இத்தாலிய மத்தியதபாற்கந்தோரின் "கொடுபடாதகடித"ப்பகுதியில் தேங்கிக்கிடக்கின்றன. அநேகமான கடிதங்கள் பிள்ளைகளிடமிருந்து "அருளப்பபாப்பானவர்" என்றும், "நல்லபாப்பானவர்" என்றும் முகவரிகளிட்டுஅனுப்பப்பட்டுள்ளன.

சிலபேர் அருளப்பபாப்பானவருக்குத் தங்கள்குறைநிறைகள், கஷ்டநஷ்டங்கள், கவலைகளைத்தெரிவித்து எழுதியிருக்கின்றனர். ஏனையோர் அவர் இன்னும் ஏன் அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்படவில்லையெனக் கேட்டெழுதியிருக்கின்றன. அவர் மரணத்தையிட்டு ஆற்றொணாக் கவலைதெரிவித்து ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலிருந்து அநேககடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

## முஸ்லீம் ஜனாதிபதி பாராட்டி நன்கொடை வழங்குகின்றார்

ஒருமுஸ்லீமான இந்தோனீசியாவின் ஜனாதிபதி சுகார்னோஅவர்கள் ஸ்பெயினிலிருந்து திவ்விய பூசைக்குவேண்டிய திராட்சை ரசத்தை அங்குஇறக்குமதிசெய்ய அனுமதிவழங்கியது மாத்திரமல்ல, ஆனால்,அதற்கு வேண்டிய பணத்தையும் ஒருநன்கொடையாகத் தாமேகொடுத்திருக்கின்றார்: கத்தோலிக்கதிருச்சபை இந்தோனீசியாவிலே கல்வித்துறையிலும், சமூகசேவைத்துறையிலும் ஆற்றிவருகின்ற அருந்தொண்டுகளைப் பாராட்டுமுகமாகவே இந்தநன்கொடையைத் தாம்வழங்கியதாக அவர் கூறலாயினர். "இது என்னுடைய விசேஷஉரிமை"என்றும் அவர் அந்நாட்டின் தலைப்பட்டணமாகிய ஜகார்த்தாநகர் அதிமேற்றிராணியாரான டிஜாஜாசெப்பொயெற்ரு ஆண்டகையிடம் தெரிவித்துநின்றார். இந்தோனீசியாநாடு பூசைத்திராட்சைரசம் உற்பத்தி செய்வதில்லை. ஒவ்வொருமூன்று வருடங்களுக்கும் ஒருமுறை அங்குள்ள திருச்சபைஅதிகாரிகள் ஸ்பெயினிலிருந்து அதைத்தருவித்துவருகிறார்கள். கடைசிமுறையாக அங்கு இறக்குமதிசெய்யப்பட்ட திராட்சைரசம் 12,320கலன். இதன்விலை 500பவுண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**ஆடிமாதம் — 1964.**

| | | | |
|---|---|---|---|
| ஞா. | 19 | பெந்தக்கோஸ்துவின் பின் 9-ம் ஞாயிறு | [ப] |
| திங். | 20 | அர்ச். ஜெரோம் எமிலியானுஸ் | [வெ] |
| செவ். | 21 | அர்ச். லோறன்ஸ் | [வெ] |
| பு. | 22 | அர்ச். மரியமதலேனம்மாள் | [வெ] |
| வி. | 23 | அர்ச். அப்பொல்லீனர் | [சி] |
| வெ. | 24 | காலதினம் | [ப] |
| ச. | 25 | அர்ச். பெரிய யாகப்பர் | [சி] |


# சத்தியவேத பாதுகாவலன்

**1964-ம் ஆண்டு ஆடி மாதம் 18-ந் திகதி**


## உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக

முதற் பெரிய வியாழக்கிழமை சாயங்காலம். அப்போஸ்தலர்கள் முதற்பூசையிற் பங்குபற்றி, முதற்சற்பிரசாதம் பெற்றுவிட்டனர். குருமாராகவும் அபிஷேகிக்கப்பட்டு விட்டனர். எனவே, தாங்கள் கூடியிருந்த வீட்டைவிட்டு யேசுநாதருடன் ஒலிவேத் மலைக்குப் புறப்படும்போது, தம்மை அஞ்சாநெஞ்சம் படைத்த பத்தடிஉயர வீரர்களாகவே கணித்துக் கொண்டனர்

அவர்களின் மனதை அறிந்த யேசுநாதர் அவர்கள் இன்னமும் பெலவீனமான மனிதரேயென்று ஞாபகப்படுத்தத் தீர்மானித்தார்.

"இன்றிரவு நீங்கள் எல்லோரும் என்னில் இடறல்படுவீர்கள்" என்றார் யேசுநாதர்.

"எல்லோரும் இடறல்பட்டாலும், நான் இடறல்படமாட்டேன்" என்று பெருமையாகப் பதிலளித்தார் இராயப்பர். "உமக்காக என் சீவனை இழக்கவேண்டி வந்தாலும் உம்மை ஒருபோதும் மறுதலியேன்".

அர்ச். மாற்குவின் சுவிசேஷத்தின்படி மற்ற எல்லா அப்போஸ்தலர்களும் அவ்விதமே சொன்னார்கள்.

இப்படித் தைரியப்பேச்சுப்பேசி இரணடொரு மணித்தியாலஞ் செல்ல முன்னரே இவர்கள் யேசுநாதரைப் பிடிக்கவந்த யூதர் கூட்டத்தைக் கண்டவுடன் பயப்பிராந்தி கொண்டவர்களாய் ஓட்டமெடுத்தனர். யேசுநாதரை அறியேன் என்று இராயப்பர் ஒரு வேலைக்காரப் பெண்ணின் முன்னால் கெஞ்சிக்கொண்டு அகன்றார்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை இரவு யேசுநாதருடன் கடைசி இராப்போசனம் அருந்தியசாலையிலே அப்போஸ்தலர்கள் கூடியிருந்தனர். துக்கமும் வெட்கமும் அவர்கள் உள்ளங்களில் அலைமோதின

திடீரென அவர்கள் மத்தியில் உயிர்த்த யேசுநாதர் தோற்றினார்.

அப்போஸ்தலர்களைப் பார்த்தால் பரிதாபமான காட்சி. ஒளித்தோடி மறையப் புற்றுக்களும் இல்லை. நடுநடுக்கத்துடன் யேசுநாதரின் கோபத்தை எதிர்நோக்கி நின்றனர்.

ஆனால், யேசுநாதர் புன்னகை பூர்த்தார். கோபமுமில்லை; கடுஞ்சொற்களுமில்லை. "உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்ற அன்புச்சொற்களுடன் அவர்களை உபசரித்தார்.

அப்போஸ்தலர்களின் பாவங்கள் பொறுக்கப்பட்டன; ஆத்துமங்கள் குணமடைந்தன. அவர்களின் உள்ளங்களில் சமாதானமும் அக்களிப்பும் குடிகொண்டன. அளவற்ற அன்புடன்வரும் அளவற்ற இரக்கம் எவ்விதமானதென்று தெளிவாக உணர்ந்து கொண்டனர்.

தேவஇரக்கம் அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமன்று; மனுக்குலம் முழுவதுக்குமே உரியதென்று நிரூபிக்கும்படி யேசுநாதர் அப்போஸ்தலர்களுக்குத் தொடர்ந்து கூறியதாவது:

"இஸ்பிரீத்துசாந்துவானவரைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவரின் பாவங்களை மன்னிப்பீர்களோ, அவைகள் மன்னிக்கப்படும்."

பாவச்சேற்றிலே புரண்டுகிடக்கும் மனிதகுலத்தைத் தமது திருப்பாடுகளின் பலன்களினாலே இரட்சிப்பதற்காக யேசுநாதராலே ஏற்படுத்தப்பட்ட தேவதிரவியஅனுமானம், பச்சாத்தாபம். என்னமுகாந்திரத்தினாலாவது பாவசங்கீர்த்தனத்துக்கு அடிக்கடி போகாமலிருப்பது அறிவின்மையைக் காண்பிக்கிறது.

விரும்பியவை எல்லாம் ஒருவனுக்குக் கிடைத்தாலும் அவன் மனதிலே சமாதானம் இல்லாவிட்டால் அவன்ஒரு துர்ப்பாக்கியன். மனச்சாட்சியில் களங்கமிருந்தால் மனச்சமாதானம் இல்லை. மனக்களங்கங்களை அகற்றுவதற்கு நல்ல பாவசங்கீர்த்தனத்தை விட வேறேவழி இல்லை.

இதுவே யேசுநாதர் திறந்துவைத்தவழி. இந்த வழியில் நடக்கும் எவனுக்கும் இவ்வுலகிலும் மறுவுலகிலும் சமாதானம் உண்டாகும்.

## குரவரின்மகன் 50 ஆண்டுகளாக ஒரு குருவானவர்

தமதுபாரியார் மரணமடைந்தபின் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்ற ஒருதந்தையின் குருபுதல்வரான வண. லேயோ ஹாட்சுவாமியார் சென்றஆனிமாதம் 9-ந்திகதியன்று தம்முடைய குருத்துவ தங்க யூபிலிவிழாவைக் கொண்டாடினர். இவர் 1939-ம்ஆண்டு இங்கிலாந்திலே அம்பிள்நகர் திருஇருதயநாதர் கோவில் பங்குக்குரவராயிருந்து அங்கு தமதுகுருத்துவ வெள்ளி யூபிலிவிழாவைக்கொண்டாடி யூபிலித்தோத்திரப்பூசை நிறைவேற்றியபோது, இவரின் தந்தையான வண. சாள்ஸ் ஹாட்சுவாமியாரே பிரசங்கம்நிகழ்த்தினார். இக்குருதந்தை நாற்பதுவருடகாலம் ஓர் ஆசிரியராயிருந்து தமதுமனைவியார் காலஞ்சென்றபின் குருமடத்தில் சேர்ந்துபடித்துக் குருப்பட்டம் பெற்றுக்கொண்டார். இவரது மாணவர்களில் தோர்மன், மைக் கோர்மைக்எனும் இருமேற்றிராணிமாரும் அடங்குவர். யூபிலிநாயகரான வண. லேயோ ஹாட்சுவாமியார் இன்று 76வயதுடையவராய் இருந்தபோதிலும் இன்றுமே விளையாட்டுப்போட்டிகளில் மிகுந்தஆர்வமுடையவர். எத்தனையோபோட்டிகளிலே அப்போது இவர்வெற்றியீட்டி அநேகபரிசில்களைப் பெற்றுள்ளார்.

## பரீஸ்நகரின் அணிகலமான மொன்மாத்தர் மகாதேவாலயம்

இற்றைக்கு 73வருடங்களின்முன் ஒருஆனிமாதத்திலே கர்தினால் றிச்சேட்ஆண்டகை பரீஸ்மாநகரின் மாபெரும் ஞானஅணிகலன்களில் ஒன்றாகத்திகழும் திருஇருதயஆண்டவரின் மகாதேவாலயத்தை ஆசீர்வதித்தார். 1870-ம்ஆண்டு பிரான்சிய–புருஷிய யுத்தத்தின்போது பாப்பானவரின் சிறைநீக்கத்துக்கும், பிரான்சின் விமோசனத்துக்குமாகத் திருஇருதய ஆண்டவர் பேரால் ஓர்ஆலயம் கட்டியெழுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அந்நகரிலே அலங்கிர்தகாட்சி அளித்துக்கொண்டிருந்த மொன்மாத்தர் குன்று இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பெற்று, 1875-ம்ஆண்டு ஆனிமாதம் கர்தினால் கிபேர்ஆண்டகையால் அதற்கு மூலைக்கல் நாட்டப்பட்டு, ஆறுவருடங்களின்பின் அவராலேயே புதியகோவிலில் முதல் திவ்வியபூசை நிறைவேறியது.

12-ம்நூற்றாண்டிலே இந்தக்கோவில் ஒருமகாதேவாலயமாகக் கட்டியெழுப்பப்பெற்று, மூன்றாவதுஈயூஜீனியஸ் பாப்பானவரால் அபிஷேகஞ்செய்யப்படலாயிற்று. இந்தஆலயத்தில் "ஜோன்அவ்ஆர்க்"என அறியப்படும் புனிதஆர்க்கின் அருளம்மாளும், சென்வின்சென்ற் டீபோல், இஞ்ஞாசியார், பிரான்சீஸ் சவேரியார், தோமாஸ் ஆக்குவைனஸ், தோமாஸ் ஏ. பெக்கெற் முதலாம் புனிதர்களும், மூன்றாவது அலெக்சான்டரும் செபஞ்செய்திருக்கிறார்கள்.

இன்று, எய்பெல்கோபுரத்துடன் இந்தமகாதேவாலயமானது பரீஸ் நகருக்குமேலாக வானளாவிநின்று இரண்டும் இருகலங்கரைத் தீபங்கள்போல் காட்சியளிக்கின்றன. மொண்மாத்தர்குன்றின்மீது இந்த ஆலயம் இருந்துவருகின்ற இடத்திலே அக்காலத்திலே"மார்ஸ்"எனப்படும் யுத்ததேவதையின்பேரால் ஓர்ஆலயம் இருந்துவரலாயிற்று.

## இனவித்தியாசத்தினால் விழையும் கேடுகளை தென்ஆபிரிக்க அதிமேற்றிராணியார் அம்பலப்படுத்தினர்

"எமது நாட்டுஇன வித்தியாசச் சட்டங்களையும் அவற்றால் விழையும் கேடுகளையும் அகில உலகமும் அறியும். அவற்றை எவரும் பூசிமறைக்க முயல்வது வீண்முயற்சியாகும்"— இவ்வாறு வெள்ளைஇனத் தென்ஆபிரிக்கருக்கு அவ்வூர்அதி மேற்றிராணியாராகிய ஹேர்ளி ஆண்டகையவர்கள் துணிவுடன் கூறியிருக்கின்றார். மேலும் பேசுகையில் "எமது நாட்டில் 17கோடிமக்கள் உண்டு. ஆனால், இங்கே 3கோடி மக்கள்தான் உண்டு என்றமுறையில் நாம் இந்நாட்டில் நடந்துவருகிறோம். எஞ்சியவர்கள் மனிதர்கள் அல்லவா? அவர்களுக்கு மனிதஉரிமைகளைக் கொடுக்க மறுப்பது நீதியாகாது. அவர்களுட் பெரும்பாலானோர் தொழிலாளர்கள், வறியவர்கள். அவர்கள் தமது குடும்பங்களுடன் வசித்து மனிதமாட்சிமையுடன் சீவிக்க வழிவகுப்பது எமது கடமையாகும்," என்றார் ஆண்டகையவர்கள்.

## புதிய கோவில்கள் கட்டுவதில் விலக்கு

வார்ஷோநகர் அதிமேற்றிராணியாரும், போலாந்தின் திருச்சபை அத்தியட்சருமான கர்தினால் விசின்ஸ்கிஆண்டகை சமீபத்திலே அந்நகரில் நோவே புறுட்னோஎன்ற தொழிலாளர்வசிக்கும் பகுதியிலே செபமாலைநாயகியின் புதியகோவில் ஒன்றை அபிஷேகஞ்செய்தபோது, அந்நாட்டிலே புதியகோவில்கள் கட்டாது அரசாங்கம் தடைவிதித்திருப்பதையிட்டுக் கண்டித்து எதிர் பேசியிருக்கின்றார். "பழைய கோவில்களைமட்டும் திரும்பக்கட்டியெழுப்ப நாம் அனுமதிக்கப்பட்டிருக்கிறோம்; ஆனால்,புதியகோவில்களைக் கட்டியெழுப்ப நாம் அனுமதி மறுக்கப்படுகிறோம்; அதிகாரிகள்—பெரும்பாலும் அரசியலையும், கம்யூனிஸ்த கட்சியையும்சேர்ந்த அதிகாரிகள் இந்தஅனுமதியை எமக்கு மறுக்கின்றார்கள்; மக்கள் உள்ளே பிரவேசிக்க முடியாதிருக்கும் கோவில்களை நாம்பார்த்திருக்கிறோம்; அவைகள் மூடப்பட்டிருக்கும் காரணமாகவல்ல; ஆனால், மக்கள் அவற்றில் மிகநெருக்கமாயிருக்கும் காரணமாகவே" என்றும் அவர்கூறலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளும் உலகிலே

## நியூசீலாந்து :

அண்மையில் பதினைந்து வயதுப் பாலியன் இவான்என்பவன் இத்தேசத்தின் பார்னெல் கிராமத்திலுள்ள ஸ்நாபக யுவானியார் ஆலயத்தில் முதல்தடவையாகத் திவ்வியபூசைக்கு உதவி செய்தபோது ஏராளமான விசுவாசிகள் மகிழ்ச்சியுடனும், அதிசயத்துடனும் பார்த்துக்கொண்டிருந்தனர். இதற்குக்காரணம் இச்சிறுவன் பார்வையிழந்தவன்.

ஆறுவயதாய் இருக்கும்போது நடைபெற்ற விபத்தொன்றினால் இவான் ஒரு கண்ணின்பார்வையை இழந்தான். பதினொராவது வயதில் பந்துவிளையாட்டின்போது மறுகண்பார்வையும் போய்விட்டது. எனவே, அந்தகச் சிறுவர்களை ஆதரிக்கும் அர்ச். இராயப்பர்நிலையத்தில் இணைந்தான்.

பாடசாலைக் காலங்களில் இந்தநிலையத்தில் தங்கும் இவான் விடுதலைக் காலங்களைப் பெற்றோருடன் கழிப்பான். திவ்வியபூசைக்கு உதவவேண்டுமென்றஆசை அவனைப்பற்றிக்கொண்டது. பங்குக்குருவர் மகிழ்ச்சியோடு பயிற்சிகொடுத்தார். பூசையின் ஒவ்வொரு அம்சங்களையும் தன் உணர்ச்சியால் அறிந்துகொண்டு அத்தருணத்தில் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய அவன் விரைவாகவே பழகிக்கொண்டான்.

திராட்சைரசம், தண்ணீர்கொண்டு வருதல், பூசைப்புத்தகத்தை ஒருபுறத்திலிருந்து மறுபுறத்துக்குக் கொண்டுபோதல், மணிஅடித்தல், எழுந்தேற்ற வேளையில் குருவின் அங்கியைத் தூக்கிப்பிடித்தல் முதலிய அம்சங்களைக் குற்றமின்றிச் செய்யப் பழகிக்கொண்டான்.

ஆயினும், பாத்திரத்தின்மீது குரு கைகளை விரித்துப்பிடிக்கும்போது அச்செயலை உணர்ந்து மணிஅடிப்பது மிகக் கஷ்டமாயிருந்தது. எனவே, பாத்திரத்தின்மீது கைகளை விரிப்பதற்கு முன்பாகப் பூசைசெய்பவர் தமதுவிரல்களால் சிறுஓசை செய்வார்.

இவ்விதம் பயிற்சிபெற்றபின் இவான் வெகு அழகாகத் திவ்வியபூசைக்கு உதவிசெய்தான். தற்போது அடிக்கடி மகிழ்ச்சியோடு பூசைக்குஉதவிசெய்து வருகின்றான். இந்நிகழ்ச்சி அவனது நிலையத்திலுள்ள அந்தகச்சிறுவர்கட்கும் உற்சாகத்தை அளித்துள்ளது. அந்த நிலையத்தில் 6வயதுக்கும் 16வயதுக்குமிடைப்பட்ட 20குருட்டுச் சிறுவர்கள் உண்டு. அனைவரும் மேற்படி ஆலயகுருவரிடம் பூசைக்கு உதவிசெய்யும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

இவான் தற்போது சற்பிரசாதஆசீர்வாதத்துக்கு உதவிசெய்யும் பயிற்சியைப் பெற்றுவருகின்றான்.

## வத்திக்கான் :

கத்தோலிக்க திருச்சபையில் நீண்டகாலமாக அனுசாரணையிலிருந்து வந்த ஒரு விதிபற்றி வத்திக்கான் அதிகாரிகள் மிக ஆழமாக ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர். குடும்பக்கட்டுப்பாட்டு மாத்திரைகளைக் கத்தோலிக்கர்கள் உபயோகிக்கக் கூடாதுஎன்பதே அவ்விதி. குடும்பக் கட்டுப்பாடு, கர்ப்பத்தடை என்பன திருச்சபையால் முற்றாக நிராகரிக்கப்பட்டவைகளாகும். ஆயினும், மேற்குறிப்பிட்ட மாத்திரைகளை உண்பதன்மூலம் வளர்ந்துவரும் சமுதாயத்தின் தொகையைக் கட்டுப்படுத்தவும், இல்லறமங்கையரின் தேகாரோக்கிய அபிவிர்த்திக்கும் உதவலாம்என்ற கொள்கை சமீபகாலமாகப் பலகத்தோலிக்க வைத்தியர்களிடையே பரவிவருகின்றது.

12-வது பத்திநாதபாப்பரசர் இப்பிரச்சனையை மிகஆழமாக ஆராய்ந்து இம்மாத்திரைகளைக் கத்தோலிக்கர் உபயோகித்தல் தகாதென அறிக்கை விடுத்தார். எனினும், நாகரீகம் வளர வளர, அறிவு விர்த்தியடைய நவீன விஞ்ஞானம் பெருகிக்கொண்டேவர, பல கத்தோலிக்க பிரமுகர்கள் இம்மாத்திரைகளைப் பகிரங்கமாகவே உபயோகித்து வருகின்றனர்.

காலஞ்சென்ற அருளப்பபாப்பு இப்பிரச்சனைபற்றி வத்திக்கான் சங்கமூலம் ஒரு திருப்திகரமான அறிக்கை விடுப்பாரென எதிர்பார்க்கப்பட்டது. காலத்துக்கேற்றவாறு திருச்சபையின் போக்கில் பலமாறுதல்களைப் புகுத்திய தந்தை இதுசம்பந்தமாக எல்லோரும் வரவேற்கக் கூடிய அறிக்கையொன்றை விடுக்குமுன் மரணம்அவரை எம்மத்தியிலிருந்து பிரித்துவிட்டது.

கத்தோலிக்க டாக்டர்கள் பலரும் இவ்விடயத்தில் தீவிரம்காட்டுகின்றனர். இன்றைய திருச்சபையின் வேதவிற்பன்னர்கள்சிலரும் இதற்குச்சாதகமாகப் பல மேற்கோள்களைக் காட்டி வருகின்றனர். ஏற்கனவே பலகத்தோலிக்கர்கள் இப்பிரச்சனையால் தங்கள் வேத அனுஷ்டானங்களைப் பாராமுகம் செய்துவருகின்றனர்.

இந்நிலையில் சின்னப்பபாப்பரசர் இப்பிரச்சனைக்கு விரைவில் நல்லதீர்ப்புக் கிடைக்குமெனத் தம்மைச்சந்தித்த 26 கர்தினால்களுடன் பேசும்போது குறிப்பிட்டார்.

"இது இன்றையசமுதாயத்தின் மிக முக்கியமான பிரச்சனையென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. வளர்ந்துவரும் மனிதசமூகத்தின் தொகையை இன்றையஉலகு தாங்கிக்கொள்ள இயலாதென்பதும் உண்மையானதே. இதுபற்றிக் கர்த்தரின் கொள்கைகட்கு வழுவாதவகையில் இன்றைய விஞ்ஞான, மருத்துவ கொள்கைகளுடன் ஓரளவு ஒத்துப்போகும் வண்ணமும், எமது திருச்சபையினர் ஏற்றுக்கொள்ளும் முறையில் நல்லதொரு அறிக்கையை வெளியிடுவது எம்கடமையாகும்" என அவரது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சனையை வத்திக்கான் உயர் அதிகாரிகள் நன்கு ஆராய்ந்து வருகின்றனர். அனேகமாக அடுத்தவத்திக்கான் சங்க பொதுக்கூட்டத்தில் இப்பிரச்சனைக்குத் தீர்வுகாணப் படலாம்என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஹங்கேரி :

ஹங்கேரிய அதிகாரிகட்கும், வத்திக்கான் உயர்அதிகாரிகட்குமிடையே ஹங்கேரிய கத்தோலிக்க திருச்சபை சம்பந்தமாக நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் விரைவில் நல்லதோர் முடிவையளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பேச்சுவார்த்தைகளில் முதலிடம்வகிப்பது கர்தினால் மின்செந்தி சம்பந்தமான பிரச்சனையேயாகும். கடந்தவருடம் விடுதலைசெய்யப்பட்ட ஹங்கேரிய மேற்றிராணிமாருக்கு அவரவருக்குரிய மேற்றிராசனங்களைத் திரும்பவும் கையளித்தல், கத்தோலிக்கதிருச்சபை மீண்டும் வத்திக்கானுடன் தொடர்புகொண்டியங்க இடமளித்தல் என்றஅம்சங்களும் இருபாலாராலும் நன்கு ஆராயப்பட்டு வருகின்றன. 1956-ம் ஆண்டில் கம்யூனிஸ்த அரசாங்கத்துக்கெதிராக நடத்தப்பட்ட புரட்சியின்போது கர்தினால் மின்செந்தி ஆண்டகை புரட்சிவாதிகளால் விடுதலைசெய்யப்பட்டார். சில தினங்களின்பின் மீண்டும் கம்யூனிஸ்த அரசாங்கம் புரட்சிவாதிகளை நசுக்கிக் கர்தினாலையும் கைப்பற்றமுயன்றபோது தப்பியோடி அமெரிக்கதூதுவர் காரியாலயத்தில் அடைக்கலம் புகுந்தார். இன்றுவரை அதேகாரியாலயத்தின் மேல்மாடி அறையொன்றில் விடுதலையாகியும், அடைபட்டவராக வாழ்க்கை நடாத்தி வ[illegible] கேரியைவி[illegible]றால் அவருக்கு மன்னிப்புத் தருவதாகக் ஹங்கேரிய அரசு கூறுகின்றது. தம் தாய்நாட்டை விட்டுச்செல்ல ஆண்டகை மறுக்கின்றார். தமக்குக் கடந்த எட்டுவருடங்களும் தஞ்சம்தந்த அமெரிக்கஅரசு தம்மைஇனிமேல் வெளியேற்றினாலும் ஹங்கேரிய நாட்டில் கைதியாகவெனினும் தம் திருச்சபையினருடன்வாழ்வதே அவர்குறிக்கோள். ஆயினும், பாப்பரசர் கட்டளையிடுமிடத்து அதற்கு அடிபணிவர். பாப்பரசரோ ஹங்கேரிய பிரச்சனையைப் பொறுமையுடன் ஆராய்ந்து வருகின்றார். பாப்பரசரின் பிரதிநிதிகள் ஹங்கேரியுடன் நடத்தும் பேச்சுக்களின் நல்முடிவை நாமும்எதிர்நோக்குவோம்.

## பேய்ரூட் :

பாப்பரசரின் தலைமைஎன்ற அம்சம் கிறீஸ்தவ ஒற்றுமைக்கு ஒருபோதும் முட்டுக்கட்டையாக இருக்கமாட்டாதென ஒதொடக்ஸ் சபையின் மெல்கீர்க் பத்திரியாக்குவான நான்காவது மாக்சிமஸ் செயாக்அவர்கள் அண்மையில் பேய்ரூட் நகரிலிருந்து வெளியாகும் லா ஒரியன்ற்என்ற பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறார். கிறீஸ்து இராயப்பரின் தலைமையில் தம் மதத்தை ஸ்தாபித்தார். எது எப்படியாயினும் கத்தோலிக்க திருச்சபையினர் பாரம்பரியமாக அந்தத் தலைமையைத் தொடர்ந்து அனுசரித்து வருகின்றனர். இராயப்பர் அப்போஸ்தலர்களுள் ஒரு[illegible]இருந்தார். அதுபோலவே [illegible]வரும் ஆயர்களுள் ஒருவராகவும், அதேதருணத்தில் ஆயர்குழு

(அடுத்த பக்கம் பார்க்க)

# பேசும் பேனா

## சர்க்கஸ் பசிப்பியா :

சர்க்கஸ் பசிப்பியா கோஷ்டியினரின் காட்சிஒன்றுக்குச் சென்றிருந்தேன். சாதாரணமாகச் சர்க்கஸ்என்றால் உடனே பிறநாட்டவரின் சர்க்கஸ் விளையாட்டுகள்தான் நினைவுக்குவரும். அந்தக் கோஷ்டிகளோடு பல காட்டு மிருகங்களும் வரும். அந்த மிருகங்கள் காட்டும் வித்தைகளும், விளையாட்டுகளும் விநோதமாகவும், மயிர்க்கூச்செறியும்படியும் இருக்கும்.

## ஈழச் சிறுவர் :

ஆயின் சர்க்கஸ் பசிப்பியா நம்நாட்டுச் சரக்குதான். அதில் விளையாட்டுகள் நடத்துபவர்களும் நம்மவர்தான். அத்துடன் அவர்கள் அனைவரும் பதினாறுவயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர்தான். இந்தச் சர்க்கஸ்கோஷ்டியில் காட்டுமிருகங்களையும் காணமுடியாது. ஒரேயொரு நாய்மட்டுமே இந்தக்குழுவில் உண்டு.

## பயங்கர நிகழ்ச்சிகள் :

அறுபதடி உயரத்தில் இந்தச் சிறுமிகள் அநாயாசமாக 'பார்'விளையாட்டுகள் செய்துகாட்டுகின்றார்கள். மெல்லிய கம்பிக்கயிற்றின்மேல் ஒருசிறுமி சைக்கிள்சவாரி விடுகின்றாள், ஏழுவயதுச் சிறுமிகள் இருவர் 20அடிஉயரத்தில் ஒருசிறு பலகையின்மேல் அற்புத ஆடல்கள் நடத்துகிறார்கள். மூன்று மணித்தியாலம் நீடிக்கும் இந்தக்காட்சிகள் உண்மையிலேயே வெளிநாட்டவரின் சர்க்கஸ்தரத்துக்கு எந்தவிதத்திலும் தாழ்ந்தவையல்ல.

## கடுமையான பயிற்சி :

இவ்வித விளையாட்டுகளைச் செய்வது எளிதல்ல. நம்தேகத்தை நினைத்தபடியெல்லாம் வளைத்தெடுப்பதென்பதும் இலகுவானதல்ல. நீண்டநாட்கள் கடுமையான பயிற்சிகள் செய்தபின்பே இவ்வித சாதனைகளைச் செய்துகாட்ட இயலும். பாடுபடாமல் பயன்பெற இயலாது. ஒவ்வொரு நிகழ்ச்சியும் முடிந்தபின்னர் பார்வையாளர்கள் பலத்த கரகோஷம்செய்து பாராட்டுகின்றனர். இந்தப் பாராட்டுக்கள் கஷ்டப்படாமல் பெறப்பட்டனவல்ல.

## ஆன்மீக பயிற்சி :

நம் ஆன்மாவையும் அறவழிச்செலுத்துவதென்பது இலகுவானதல்ல. தினசரி நம் தேகத்தைவருத்தித் தவமுயற்சிகளில் ஈடுபடுத்துவதும் எளிதானதல்ல. காலைமாலைச் செபங்களை ஒழுங்காகச் சொல்வதே நம்மவரில் பலருக்கு மிகுந்த சிரமமாய் இருக்கின்றதே. சர்க்கஸ் விளையாட்டுகளைப் பார்த்துக்கொண்டிருந்தபோது இந்தஎண்ணமே என்மனதில் உதித்தது. நமது ஆன்மாவையும், உடலையும்வருத்தி மோட்ச பாதையில் வழிநடாத்தினால் அப்பாடுகளின் முடிவு மிகுந்த பயனுள்ளதாக, மோட்ச இராச்சியத்தை அடைவதற்கு உதவியாக இருக்குமல்லவா ?

## உங்களுக்குத் தெரியுமா :

✻ அயர்லாந்திலுள்ள தேவாலயமொன்றில் ஒரு பூசைப்பாத்திரத்தை மிகுந்த கவனத்தோடு பாதுகாத்துவருகின்றனர். பலபுனிதர்களால் பூசை வேளைகளில் உபயோகிக்கப்பட்ட இப்பாத்திரம் 1494-ம்ஆண்டில் தயாரிக்கப்பட்டதாம்.

✻ புனிதர் பேர்ணடின் அவர்கள் பிரசங்கங்கள் நிகழ்த்துவதில் வல்லவர். அவர் எங்குச்சென்றாலும் பெருந்திரளானமக்கள் அவரது நல்லுரைகளைக் கேட்கத் திரண்டுசெல்வர். ஒருமுறை அவர்நிகழ்த்திய பிரசங்கத்தைக்கேட்க முப்பதாயிரத்துக்குமதிகமான மக்கள் திரண்டிருந்தார்களாம்.

✻ வத்திக்கான் இராச்சியத்தினுள்ளும், இராயப்பர் மகாலயத்திலும் புகைப்படமெடுக்க லூகி பெலிசி என்பவருக்கே உரிமையுண்டு. இவர் பாப்புவின் படப்பிடிப்பாளர்என்ற கௌரவத்தை உடையவர். அவரது மூன்று தலைமுறையைச் சேர்ந்தவர்கள் இன்றைய பாப்புமுதல் இதற்குமுந்திய ஏழு பாப்புமார்களின் படப்பிடிப்பாளர்களாகச் சேவையாற்றியுள்ளார்கள்.

✻ யேசுநாதரைக் கோவிலில் காணிக்கையாக்கின திருநாளை மாசித்திங்கள் 2-ம்நாளில் கொண்டாடுகிறோம். இத்தினம் மெழுகுவர்த்தித் திருநாள் எனவும் அழைக்கப்படுகின்றது. எனினும் இத்திருநாளில் மெழுகுவர்த்திகளை ஆசீர்வதிக்கும்சடங்கு 11-ம் நூற்றாண்டில்தான் திருச்சபையால் புகுத்தப்பட்டதாம்.

## ரோஜாமலர் மாரி :

மோட்சத்திலிருந்து ரோஜாமலர் மாரி பொழிவேன் எனச் சின்னத்தெரேசம்மாள் இறக்குமுன் மொழிந்தாள். 35வருடங்களின்முன் பரிசுத்தபாப்பரசர் அப்புனிதையைப் புதுவேதநாடுகளின் பாதுகாவலியாக நியமித்தார். 1927-ல் உலக கத்தோலிக்கரின் எண்ணிக்கை 27கோடி. இன்றோ 55கோடி. இதில் பெரும்பான்மை விசுவாசப்பரப்புதல் நாடுகளிலிருந்தே வருகிறது. 1927-ல் ஆபிரிக்க கத்தோலிக்கரின் தொகை 20லட்சம். இன்று அங்கு இரண்டுகோடிக்கு மேலாக அதிகரித்துள்ளது. யப்பானியர், இந்தியர், சீனர், ஆபிரிக்கர்ஒவ்வொருவர் கர்தினாலாகவும் தெரியப்பட்டுள்ளனர். இவ்வளவுக்கும் காரணம் மலர்மாரி பொழியும் அந்தக் கார்மேல்சிறுமியே; அந்தச்சிறுமி இவ்வுலக வாழ்க்கையின் போது பெருமுயற்சிகளைக் கையாளவில்லை. சிறுசெபங்கள் சிறுதபமுயற்சிகளால் யேசுவின் அன்பைக் கவர்ந்தவள். அந்தச் சிறுவழி எமக்கு நல்வழி.

## நகைச்சுவை :

இந்த நீண்டவிடுமுறையில் உலகைச் சுற்றிப்பார்க்கும் ஒரு சுற்றுப்பயணத்தை நடாத்துவோமாஎனக் கணவன் மனைவியிடம் கேட்டான்.

உலகைச் சுற்றிப்பார்க்க எனக்கு இஷ்டமில்லை. வேறுஎங்காவது போவோம்எனப் பதில்வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு குருவா?

( வே. அன்னனி ஜோண் )

புனித இராயப்பர் ஒரு சாதாரண மனிதன். ஒரு செம்படவன். பெரிய எழுத்தாளரல்ல, பேச்சாளரல்ல. புனிதலூக்காசைப்போன்று ஒருசிறந்த மருத்துவனல்ல, வைத்தியனல்ல, பெரும் நாவலரல்ல, புலவர்அல்ல. இருந்தும் பெரும் புலவரைப்போன்று சில இடங்களில் பேசியுள்ளார். ஓர் இடத்தில் இப்படிப்பேசியுள்ளார். "நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட வம்சம், இராஜரீக ஆசாரியக்கூட்டம் (A Royal priesthood), பரிசுத்த ஜனம், கடவுளின் சம்பாத்திய பிரஜைகளுமாயிருக்கிறீர்கள்". புனித இராயப்பர் இவ்வசனங்களைப் பரிசுத்த தைலத்தால் பூசப்பட்ட அபிஷேகம் செய்யப்பட்ட குருமார்களைப்பார்த்துக் கூறவில்லை. ஆனால், சாதாரண கிறிஸ்தவர்களைப்பார்த்தே கூறினார். கத்தோலிக்க மக்களைப்பார்த்து, கத்தோலிக்க இல்லறவாசிகளைப் பார்த்தே கூறினார். "நீங்கள் இராஜரீக ஆசாரியக்கூட்டம்," இவ்வசனம் வெறும் கற்பனையல்ல, கவிதையல்ல. ஆனால், ஓர் உண்மையான காரியத்தை எடுத்துக்காட்டுகின்றது. ஆதிக் கிறிஸ்தவர்களைப்பார்த்து புனித இராயப்பர் இவ்வசனத்தைக் கூறினார். ஆதிக்கிறிஸ்தவர்கள் இதை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், இன்று நவநாகரீக உலகிலே உல்லாசமாக வாழும் ஆணும் பெண்ணும் இவ்வசனங்களைக் கேட்டதும் திடுக்கிடுகிறார்கள். யார்? நானா? இராஜரீக ஆசாரியக்கூட்டத்தில் நான் ஓர் உறுப்பினரா எனக் கேட்கிறார்கள்.

பதில் ஆம். நீர் இராஜரீக ஆசாரியக்கூட்டத்தில் ஓர் அங்கத்தவன். சற்று ஆராய்ந்து பார்ப்போம். சற்றுச் சிந்திப்போம்.

கத்தோலிக்க மறையின் ஒருமுக்கிய படிப்பினை என்னவெனில்—கடவுளுக்கும் எங்களுக்கும் இடையில் இருப்பவர் யேசுக்கிறிஸ்துநாதர். அதிஉன்னதகுரு. எங்கள் மத்தியஸ்தர். "ஆகையால் வானமண்டலங்களை எல்லாம் ஊடுருவிப்போயிருக்கிற சர்வேசுரனுடைய சுதனாகிய யேசுநாதர் நமக்கு மகா பிரதான குருப்பிரசாதியாய் இருக்கையில் நாம் ஏற்றுக்கொண்ட விசுவாசத்தைக் கடைப்பிடிப்போமாக" (எபிரேயர். 4 : 14). யேசுக்கிறிஸ்துநாதர் மெய்யாகவே ஒருகுரு. உலகிலே கிறிஸ்து இருந்தபொழுது குருத்துவத்தின் அலுவலை ஆற்றிக்கொண்டே இருந்தார். கிறிஸ்துநாதர் திருச்சபையை இவ்வுலகில் ஸ்தாபித்தபொழுது ஏழு தேவதிரவிய அனுமானங்களையும் ஏற்படுத்தினார். அடிப்படையான தேவதிரவிய அனுமானம்—ஞானமுழுக்கே. இதனால் நாம் கிறிஸ்துவோடு ஒன்றாகிறோம். அவர் ஸ்தாபித்த மறைஉடலான திருச்சபையின் அங்கத்தவர்களாக ஆகின்றோம். உறுதிப்பூசுதலால் கிறிஸ்துவோடு மிகவும் அன்னியோன்னியவிதமாய் ஒன்றித்திருக்கிறோம். உறுதிப்பூசுதல் ஞானஸ்நானத்தின் பூர்த்தியாகும். (Confirmation is the Fulfillment of Baptism). கிறிஸ்துநாதர் உண்மையாகவே ஒரு குரு. ஆதலால் இவ்விரு தேவதிரவிய அனுமானங்களும் எம் ஆத்துமத்தில் ஞானமுத்திரையை இடுகின்றன. கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கு பற்ற எமக்கு உதவி அளிக்கின்றன. நாம் கடவுளின் மக்களாய் வருகின்றோம். சாதாரண மனிதனும் மனுஷியும், ஆணும் பெண்ணும், கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்குபற்றுகிறார்கள். பரிசுத்த பாப்பரசர் பன்னிரெண்டாம் பத்திநாதர் கூறுவதற்கிணங்க, "ஞானஸ்நானத்தினாலும், உறுதிப்பூசுதலினாலும் நாம் இல்லறவாசிகளின் பொதுவான குருத்துவத்தில் சேர்ந்திருக்கின்றோம்".(By Baptism and Confirmation, we belong to "the Common priesthood of the laity").

**அபிஷேகம் செய்யப்பட்ட குருத்துவமும் பொதுவான குருத்துவமும்.**

எமது கத்தோலிக்க திருச்சபையின் இன்னொரு பெரிய உண்மை என்னவெனில்—கடவுளின் மக்களிடையே, திருச்சபைக்குள்ளே, சில மனிதர்களுக்கு ஞானஸ்நானமும், உறுதிப்பூசுதலும் கொடுத்து இன்னும் ஒரு விசேட தேவதிரவிய அனுமானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் குருத்துவம் என்னும் தேவதிரவிய அனுமானம். இந்தத் தேவதிரவிய அனுமானத்தால், இவர்கள் அதிஉன்னத குருவாகிய யேசுநாதரிடமிருந்து மற்றக் கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்காத சில அதிகாரங்களைப் பெறுகிறார்கள். இந்த அதிகாரங்களை ஒருவரும் இவர்களிடமிருந்து எடுக்கமுடியாது. இவர்கள்தான் கத்தோலிக்க குருப்பிரசாதிகள். இல்லற கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானத்தினாலும், உறுதிப்பூசுதலினாலும் கிறிஸ்துவின் பொதுவான குருத்துவத்தில் பங்குபற்றுகிறார்கள்.

**வாழ்க! இல்லறக் கிறிஸ்தவ குருக்கள்.**

---

● ரோமைநகரிலே சென்ற ஆனி மாதம் நிகழ்ந்த சற்பிரசாத சுற்றுப்பிரகாரமொன்றிலே சின்னப்பபாப்பரசர் நற்கருணைக் கதிர்ப்பாத்திரத்தைக் கொண்டுசென்றமையானது கடந்த நூறுவருடங்களிலே பாப்பரசர்ஒருவர் முதன்முறையாகச்செய்துள்ள ஓர் அபூர்வசெயலாகும். புராதனரோமையில் தேர்ப்பந்தையஓட்டங்கள்நடந்தேறிய "சேர்க்கஸ் மாக்ஸிமுஸ்"எனும் பரந்தமைதானத்திலேயே இச்சுற்றுப் பிரகாரம் நிகழலாயிற்று.

● ஜேர்மனிக்குத் தற்போது 1800 புதியகோவில்கள் தேவைப்படுகின்றனவென்று படர்போன்நகரின் ஐயெக்கர் மேற்றிராணியார் கூறுகின்றார். யுத்தத்துக்குப்பின் அகதிகள் பெருந்தொகையாகச்சென்று குடியேறியகாரணமாகக் கத்தோலிக்க சனத்தொகை வெகுவாக அதிகரித்துள்ள பகுதிகளில் தான் அநேககோவில்கள் தேவைப்படுகின்றன.

● காலஞ்சென்ற அமெரிக்கஜனாதிபதி கென்னடிஅவர்களின் ஞாபகார்த்தமாக முதலில் 50கோடிதபால்முத்திரைகளை அமெரிக்க அரசாங்கம் அச்சிடவிருக்கிறது. சரித்திரத்திலேயே இதுமிகப்பெருந்தொகையானதென்று அமெரிக்க போஸ்ற்மாஸ்றர்ஜெனறல் தெரிவித்திருக்கின்றார். அதன்வெள்ளேட்டு முத்திரைஒன்று அவருடைய தாயாரான திருமதி ரோஸ் கென்னடிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

● உலகப்பிரசித்திபெற்ற சித்திர சிற்பவிற்பன்னரான மிக்கேல் ஆஞ்ஜெலோவின் சித்திர, சிற்ப வேலைப்பாடுகளின் காட்சிஒன்று சமீபத்திலே ரோமைநகரில் நிகழ்ந்தபோது, அவரின் வழித்தோன்றலெனத் தன்னைப்பாராட்டிக்கொண்ட எலினா காஸ்றெலுக்கிபோன றெற்றிஎனும் 81வயதுடைய பாட்டி அக்காட்சியின்மையமாகநின்று எல்லோரது உள்ளங்களையும் ஈர்த்துக் கொள்ளலானார்.

---

# உலகுக்குயிர் ஈந்தோய்!

மன்னுயிரை மீட்க மனுவாகி வந்த அன்பே!
உம்முயிரை ஈந்தீர்! உலகம் ஈடேறுதற்காய்!
இன்முகத் தோடேற்றீர்! ஈனர் செய் கொடுமை யெல்லாம்
உம்மை வதைத் தோருக்காயும் உருகியே நீர் செபித்தீர்!

காறி உமிழ்ந்தார் கயவர் உம்மைக் கேலிசெய்தார்
சீறிச்சினந்தார் திருமேனி நைந்து இரத்தம்
பீறிப் பெருக பெலன் குன்றி நீர் வருந்த
மாறி அடித்தார் அவ்வாதை ஏற்றீர் மானிடர்க்காய்!

முள்ளைச் சிரசழுத்தி முறிந்ததடி கைக்கொடுத்து
எள்ளி நகைத்தார் "இவரே அரசன்" என்றார்
"கள்ளன்" என்றார் பொய்யர் கடிய சிலுவைசுமத்தித்
தள்ள நடந்தீர் தரையில் அதன் கீழ் விழுந்தீர்!

வீணர் உம்மைச் சிலுவை மீதில் கிடத்தி இரும்
பாணி அறைந்தார் ஐயோ! பெருங்கொடுமை!
காண மனம் பதைக்கும் கர்த்தாவே! அன்பு உரு
ஆன பரம் பொருளே! அவனிதனை மீட்டவரே!

தாகம்! தாகம்! என்று தற்பரனே! நீர் அலற
கோப உருக் கொண்ட வஞ்சர் கொடுத்தார் பிஞ்சுக்காடி
தாகம் அறிவாரோ! சற்றும் இரக்கமில்லார்
பாவம் நிறைந்தவர்கள் பண்ணினரே ஆகடியம்!

ஆவிதுடிக்க அங்கமெல்லாம் செந்நீர் பெருக
கூவிக் குரலெடுத்து கொடுமை கண்டு அன்னை அழ;
தாவி அணைக்க ஒரு தஞ்சமின்றிச் சிலுவையில் தொங்கி
பாவிகட்காய் மரித்தீர்! பரனின் திருக் குமரா!

ஆசிரியர் ச. அமிர்தநாதர்

---

யாழ்/ நாவாந்துறை

## ரோ. க. த. க. பாடசாலை

**சர்வதேசக் கூட்டுறவாளர் தின விழாவை** முன்னிட்டு யாழ்ப்-D. R. O. பிரிவில் 5-7-64-ல் யாழ்-மத்தியகல்லூரியில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் நாவாந்துறை, ரோ. க. த. க. பாடசாலை,

**ஆண்கள் கனிஷ்ட பிரிவில்:**
செல்வன் நீ. மரியதாஸ் 1-ம் இடம் பெற்றார்.
(விஷயம்: கூட்டுறவுச்சங்கம் ஒரு சமுதாய ஸ்தாபனம்)

**பெண்கள் கனிஷ்ட பிரிவில்:**
செல்வி சூ. அற்புதமலர் 3-ம் இடம் பெற்றார்.
(விஷயம்: கூட்டுறவுச்சங்கம் ஒரு சமுதாய ஸ்தாபனம்)

**ஆண்கள் சிரேஷ்ட பிரிவில்:**
செல்வன் சூ. மரியதாஸ் 1-ம் இடம் பெற்றார்.
(விஷயம்: கூட்டுறவு இயக்கம் விவசாய விருத்தியில் சாதித்தவை எவை)

**கிளிநொச்சியில்** 10-7-64-ல் வடபகுதி ஐக்கியமேற்பார்வைச் சபையின் ஆதரவில் நடைபெற்ற இறுதிப்போட்டியில்,

**ஆண்கள் கனிஷ்ட பிரிவில்:**
செல்வன் நீ. மரியதாஸ் 1-ம் இடம் பெற்றுக் கொண்டது பாராட்டத்தக்கதாகும்.

---

## தையல் நிலையத் திறப்பு விழா

**அளம்பிலில்**

அளம்பில் கிராமத்தில் சென்ற 11-7-64இல், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரால் கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் மாதர்சங்கத்தின் ஆதரவில் தையல் பயிற்சிவகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிலையத்தை முறைப்படி திறந்து வைத்த அரசாங்க அதிபரே பொதுக் கூட்டத்துக்கும் தலைமை வகித்து; கிராமங்கள் தோறும் தையல்நிலையங்கள் ஆக்கிவைப்பதன் அவசியம்பற்றி [illegible] சொற்பொழிவாற்றினார்.

இவரைத் தொடர்ந்து கி. மு. ச. தலைவர் திரு. பி. வி. மிக்கேற்பிள்ளை அவர்களாலும், கி. மு. சங்கங்களின் மேற்பார்வையாளர் திரு. யோ. தேவசகாயம் அவர்களாலும், காரியாதிகாரி திரு. மா. நடராசா அவர்களாலும் சொற்பொழிவுகளாற்றப்பட்டன.

பாடசாலைப் பிள்ளைகளின் கதம்ப நிகழ்ச்சிகளுடனும், சிற்றுண்டி வகுபானவகைகளுடனும், காரியதரிசியின் நன்றிநவிலலுடனும் விழா இனிதே சம்பூரணமாயிற்று. —நிருபர்.

---

## உங்கள் சந்தாவை அனுப்பிவிட்டீர்களா?

---

## உருளும் உலகிலே

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் தலைவராகவும் இருக்கின்றார். எனவே கிறீஸ்துவின் விதிமுறைக்கிணங்க திருச்சபைக்கு ஒரு தலைமைப்பீடம் இருக்கவேண்டுவது அவசியமே. அப்பீடத்தின் உயர்மனிதராக, கிறீஸ்தசபையின் தலைவராகப் பாப்புஎன்ற ஒரு தலைமைப்பதவி இருப்பது சரியானதே. கத்தோலிக்க திருச்சபைக்கும், இதரதிருச்சபைகட்கும்இடையிலுள்ளகருத்துவேற்றுமைகள்பற்றியே முக்கியமாக ஆராயப்படுதல் வேண்டும். பாப்புஸ்தானம் எல்லாச் சபையினராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தொன்றுஎன இவர் அப்பத்திரிகைமூலம் தெரிவித்துள்ளார்.

---

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 25-ந்தேதி சனிக்கிழமை பி. ப. 4மணியளவில் வழமைப்பிரகாரம் சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். அச்சமயம் சில சகோதரர் தங்கள் நவசந்நியாசத்தை முடித்து வாக்குத்தத்தம் எடுப்பார்கள். எல்லோரும் நேரத்தோடு சமுகங்கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

A. S. FRANCIS of MARY,
சபைக் கர்த்தருக்காக.
யாழ்ப்பாணம், 14-7-64.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்பார்ந்த தம்பி, தங்கையர்களே உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்!**

வாலிபரே சமுதாயத்தின் சாரம். ஆகையால்தான் ஜேர்மனியில் ஹிற்லரும், இத்தாலியில் முசோலினியும், ருஷியாவிலும், அதன் ஆதிக்கத்தில் அடங்கிய நாடுகளிலும் அவற்றின் தலைவர்களும் இளைஞர்கள்மேல் அதிக கவனஞ் செலுத்தினர்கள்.

இளைஞர்களில் ஓர் ஆவல்உண்டு. திறமையாக ஏதோ ஓர்அலுவலை நிறைவேற்றித் தங்களையும் தங்கள் செயல்களையும் என்றும் அழியாத ஞாபகத்தில் இருத்தவேண்டுமென்பதே அவர்களிடமுள்ள அந்த அவாவாகும்.

தங்களுக்கு முன்னிருந்தவர்கள் நிறைவேற்றிய கருமங்களையும், கண்டுபிடித்த புதிர்களையும், அவைகளால் உலகத்திலுண்டான மாற்றங்களையும் அறிந்து தாங்களும் அப்படிச் செய்யவேண்டுமென்று அவர்கள் ஆவல்கொள்ளுகின்றனர். ஆரம்பத்தில் அவர்களது இலட்சியம் தெளிவாயிருப்பதில்லை. காலஞ் செல்லச்செல்ல அது தெளிவாகிறது. அதை நிறைவேற்றுவதே அவர்களின் எண்ணமும், கனவும்.

கனவென்றுதான் கூறவேண்டும். எந்த இளைஞனும் தன் சீவியத்தின் ஒரு பகுதியில் கனவுலகத்திலேயே (இலட்சிய உலகத்திலேயே) சீவிக்கிருன். அவனுடைய ஆவலும் கனவுலகிலேயே சேர்ந்துவிடுகின்றது. இது கற்பனையாக மாத்திரம் நிலைபெறுகிறதா? இல்லை. கனவு நனவாகிறது. கற்பனை உண்மை ஆகிறது.

கற்பனை உலகத்தில் கட்டியகோட்டைகள் இடிந்துபோக வேண்டியதில்லை. கோட்டைகள் கட்டவேண்டியது அவ்விடந்தான். அவைகள் நிலைகொள்வதற்கு ஓர் அத்திவாரமே தேவையாகின்றது.

திருச்சபை இலட்சிய இளைஞர்களை அதிகம் தேடுகிறது. நரதேவனுகிய கிறீஸ்துவே நமது இலட்சியம். கிறீஸ்து உங்கள் இலட்சியமாயிருந்தால், உலகத்தில் எவ்வளவு உத்தாரணம் இருக்கும்.

—அண்ணு.

## வெற்றி யாருடையது?

சில ஆண்டுகளுக்குமுன் மொஸ்கோவில் கர்த்தர்உயிர்த்த திருநாளையொட்டி ஒரு கம்யூனிஸ்த கூட்டம் நடந்தது. கம்யூனிஸ்த கல்விமந்திரியான லூனட்சார்ஸ்கி சொற்பொழிவு நிகழ்த்தினுன். அன்று ஏராளமானமக்கள் வந்திருந்தனர். "என் விஞ்ஞான ஆராய்ச்சியைப் பற்றிச் சந்தேகிப்பவர் உங்களில் யாராவது இருக்கிருர்களா? கடவுள் இல்லை ஆத்துமம் கிடையாது, வேதம்என்பது சுத்தஅபத்தம்; இதுதான் விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவு" என்ருன்.

கூட்டத்தின் கடைசியில் இருந்த ஒரு வயோதிகக் குருஎழுந்து தாம் பேசவிரும்புவதாகத் தெரிவித்தார். கல்விமந்திரி வேண்டாவெறுப்புடன் சம்மதித்தான். குரு வெகுசிரமத்துடன் மேடைமீதேறினுர். கூட்டத்தைநோக்கி: "சகோதரரே கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்தார்" எனக் கூவினுர். (கர்த்தர் உயிர்த்த திருநாளன்று இவ்விதமாகவே ருஷியாவில் மக்கள் வாழ்த்துக்கூறுவது வழக்கம்).

உடனே மக்கள்யாவரும் ஒரே சத்தமாய் "உண்மையாகவே அவர் உயிர்த்தெழுந்தார்" என்ற வழக்கமான பதிலைக்கூவி வாழ்த்துக்குப் பதிலளித்தனர். அந்த வயோதிப குரு உயிரிழந்திருக்க வேண்டும்; எனினும் வெற்றி அவருடையதே.

## தெரியுமா?

முகச்சவரம் செய்யும் வழக்கம்எவ்வாறு உண்டானது?

முற்காலமக்கள் எல்லோரும் தாடி வளர்த்திருந்தார்கள், முகத்துமயிரை வழித்துக் கொண்டவனின் தோற்றம் மற்றவர்களுக்கு அச்சம் விளைப்பதாயிருந்தது. ஆகவே, அரசர், அதிகாரிகள், படைத்தலைவர் போன்று மற்றவர்கள்மீது அதிகாரம் செலுத்துவோர் பிறருக்கு மேலும் அச்சமூட்டும்படி தமது முகத்தை வழிக்கலாயினர். நாளடைவில் முகத்தை வழித்துக் கொண்டவர்கள் மற்றவர்களிலும் பார்க்கப் பிரபுத்தன்மை உடையவர்கள் என்னும் கருத்து நிலவுவதாயிற்று.

## அங்கத்தவர் வரிசையிலே........

| | | | |
|---|---|---|---|
| B | 472 | செல்வி | எமிலியா நிர்மலா, மாத்தளை. |
| | 473 | செல்வன் | கி. அல்பேட் பங்கிராஸ், சில்லாலை: |
| | 474 | ,, | எவ். மரியதாசன் கூஞ்ஞு, கொச்சிக்கடை. |
| | 475 | செல்வி | எ. மொயிரூ டுஷஅந்தி, அச்சுவேலி. |
| | 476 | செல்வன் | செ. அந்தோனி, நாவற்காடு. |
| | 477 | ,, | கிறிஸ்டி கெபிரியேல் நோர்வூட். |
| | 478 | ,, | பா. வேதநாயகம், கிளிநொச்சி. |
| | 479 | ,, | சூ; மரியஜெயநாதன், சில்லாலை: |
| | 480 | ,, | சூ. ஜெம் றெமிஜியர் பீரிஸ், வங்காலை. |
| | 481 | ,, | சூ. அன்ரன் றெசீஸ், சில்லாலை. |
| | 482 | செல்வி | புஷ்பராணி ஆசீர்வாதம், கரவெட்டி. |
| | 483 | செல்வன் | ஜி. அகஸ்ரின் றொட்றிக்கோ, கண்டி. |
| | 484 | செல்வி | மரியம் சமரக்கோன், இளவாலை. |
| | 485 | செல்வன் | லோ. வில்பிறெட் டமஸ், தலைமன்னர். |
| | 486 | செல்வி | ச. நசரேத் லெம்பேட், தலைமன்னர். |
| | 487 | ,, | ஆர். மார்கறெற் கபிரியேல் நோர்வூட். |
| | 488 | செல்வன் | கமலீன் மைக்கேல், திருமலை. |
| | 489 | செல்வி | வத்சலாதேவி சாமிநாதன், [illegible] |

# வெற்றியின் சின்னம்

சிலுவையில் அறைவது ஹீப்ருசாதியினரின் மரணதண்டனை அல்ல. பாலஸ்தீனத்தில் அத்தண்டனை ரோமானியரால் புகுத்தப்பட்டது. இத்தண்டனைமுறை செராமிஸ்என்ற நங்கையின் கற்பனையில் உருவானது. பின்னர் அசீரியரும், பார்சியரும் இத்தண்டனைமுறையை உபயோகித்தனர். அங்கிருந்து எகிப்துக்கும் கார்தேஜ்ஜுக்கும் பரவியது. பின்னர் கிரேக்கர்கள் இம்முறையை உபயோகித்தனர். இறுதியில் உரோமானியர்கள் இத்தண்டனையை அமுலுக்குக் கொணர்ந்தனர்.

இவ்விதமே சிலுவையிலறைதல் மிகப்பெரும் மரணதண்டனை ஆகியது. அடிமைகளுக்கும், அகதிகளுக்கும் இறுதித்தண்டனை அது. தேசத்துரோகிகட்கும், புரட்சியாளர்கட்கும் தண்டனை அதுவே. இத்தண்டனை பெறுவோர் மனிதசமூகத்தால் வெறுத்தொதுக்கப்படுவர், தண்டனையின் சின்னமாய சிலுவையும் மக்கள் வெறுப்புக்குப் பாத்திரமாயது. கிறீஸ்துவின் மரணத்தால் சிலுவை புத்துயிர்பெற்றது. அவரது இரட்சணிய வேலையின் பிரசங்க மேடையாக அது மாறியது. இறைவனுக்குத் தம்மையே அவர்தந்த இரட்சணியப்பலியின் பீடமாகவும் அது விளங்கியது.

"மெசயா தமது இராஜரீகத்தின் சின்னத்தைத் தோளிலே சுமந்துசெல்வார்." பலவருடங்களின் முன்னர் இசையாஸ் தீர்க்கதரிசி மொழிந்த வாசகம் இது. ஆம், பெரியவெள்ளியன்று கிறீஸ்து சிலுவையொன்றைச் சுமந்துசென்ருர். அம்மரம் அவரால் மகிமை பெற்றது. அவரின் இராஜரீக சின்னமாகியது. உலக முடிவுவரை கிறீஸ்துவின் வழிச்செல்வோரின் வெற்றிச் சின்னமாக விளங்குவது அச்சிலுவையே. சக்கரவர்த்தி கொன்ஸ்தந்தின் வெற்றிகாண உதவியது அச்சின்னம்.

சிலுவையின் பாரத்தைப் பொறுமையோடு தாங்கினுர் கிறீஸ்து. அதனுல் வெற்றிக்கு உரியவர் ஆனுர்.

எம் சிலுவையான துன்பதுரிதீங்களை நாம் பொறுமையோடு சுமத்தல்வேண்டும். அப்போது கிறீஸ்துஅடைந்த வெற்றி எமக்கும் உரியதாகும்.

சா. பெ.

தலைவில்லு

## அர்ச். அன்னம்மாள் திருப்பதி

| | |
|---|---|
| கொடியேற்றம்: | 12-7-64 |
| 1-ந் திருநாள்: | 19-7-64 |
| தேவநற். பெருநாள் | 23-7-64 |
| 2-ந் திருநாள்: | 26-7-64 |

திருப்பதித் தலைவர்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச். யூதாததேயு, அர்ச். சதாசகாயமாதா, அர்ச். மருதமடுச் செபமாலைமாதா இவர்களை இரந்து மன்ருடினேன். நான் கேட்ட மன்ருட்டால் எனது மகனுக்கு வந்த வேலை ஆபத்து அற்புதமாய் நீங்கியது. இன்னும் என்மகனின் வேலைக்கு ஒரு பங்கமும்வராமல் காத்து இரட்சிக்கும்படி இரந்துமன்ருடுகிறேன். மேலும் எனது இருபுதல்விகளும் சுகபிரசவம் பெற இவர்களை நம்பிப் பிராத்திக்கிறேன்.

மலாயா. ஓர் அடியான்.

மக்களின்சுகத்துக்கும், மனேதத்துவத்துக்கும் கெடுதியைவிளைத்து, அதனுல்வேலைநேரத்துக்கும், அதுகாரணமாகப் பணவருவாய்க்கும் வெகுநஷ்டம் உண்டுபண்ணுவதாலே திருச்சபையின் திருநாட்களை யெல்லாம் ஒழித்துவிடவேண்டுமென்று "பிருவ்டா" எனும் சோவியற் கம்யூனிஸ்த கட்சிப் பத்திரிகை பிரஸ்தாபித்திருக்கின்றது.



திருமதி சவிருசி மாக்
அமலன்பதம்சேர்ந்த

## 5-ம் வருட மரணஞாபகம்

"ஐந்தாண்டு கழிந்ததுவே தாயே எங்கள்
உள்ளமதில் மூண்டகனல் நார்ந்ததில்லை
நீராண்ட கண்களொடு நெஞ்சம்வெந்து
நீருகிப் போகிலுமுன் நினைவுபோமோ
பேராண்டு வாடாத ஜோதியே உன்
பேரான மக்கள் இங்கு வாடுகின்ருேம்
சீராண்ட பொன்னுலகில் சிறப்புக்கண்ட
அன்னையே எம்மவர்க்காய் வேண்டு
வாயே."

என்றும் எங்கள் மனதைவிட்டு மறவாத திருமதி சவிருசி மாக் மண்ணுலக வாழ்வைநீத்து விண்ணுலக வாழ்வெய்திய 5-ம்வருட நினைவுதினம் 22-7-64-ல் பூர்த்தியாகிறது. அன்று நவாலி, சம்பேதுருவானவர் தேவாலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளே, சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிகளே, அன்பர்களே இரக்கமுள்ளதேவன் இவவுக்கு நித்திய இளைப்பாற்றியை அருளுமாறு மன்ருடும்படி வினயமாக வேண்டுகின்ருேம்.

இவவின் பிரிவால் துயருறும்:

பிள்ளைகள்:

ருேசமுத்து பேதுருப்பிள்ளை, ஞானப்பூ குருசுமுத்து, அன்னம்மா சவரிமுத்து, அருளம்மா மாக், சங். சிஸ்ரர் மேரி காமலின்டா, ஏ சி.

பேரப்பிள்ளைகள்:

சங். சிஸ்ரர் மேரி அனல்லா, ஏ. சி. நேசம் பூதத்தம்பி, மேரிதிரேஸ், யேசுதாசன்.

நவாலி



## 3-ம் வருட மரணநினைவு

**வயது: 35 — மரணம்: 23-7-61**

"சர்வேசுரன் கொடுத்தார் சர்வேசுரன் எடுத்துக்கொண்டார்; ஆண்டவருக்குப் பிரியமானது நிறைவேறியது; அவரின் திருநாமம் வாழ்த்தப்படக் கடவது." (யோபு 1—21)

எங்களைவிட்டுப் பிரிந்தாலும் எங்கள் நினைவைவிட்டு என்றுமே அகலாத செல்வன் ஜோட்ஜ் ஹென்றியூலன் இவ்வுலகைவிட்டுப்பிரிந்த 3-ம்வருடம் நிகழும் ஆடி மாதம் 23-ந்திகதிவருகிறபடியால் அன்று தினம் ஊர்காவற்றுறை சந்தியோகுமையோர் ஆலயத்தில் காலை 6மணிக்கு அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு துக்கப்பாடற்பூசை நிறைவேறும். இதனைக் கண்ணுறும் அன்பர்கள் அனைவரும் இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிருேம்.

இரக்கமுள்ள யேசுவே இவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும் சுவாமி.

என்றுமே மறக்கமுடியாத
பெற்ருேரும், சகோதரரும்.

உதயதிசை,
ஊர்காவற்றுறை.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதய அரசரின் இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் தயவாலும், அர்ச். சூசையப்பர், அர்ச். யூதாததேயு, அர்ச். அந்தோனியார், அர்ச். மாட்டின் டிபோரஸ், அர்ச். இஞ்ஞாசியார் இவர்களின் கிருபையாலும் எனது எண்ணம் நிறைவேறியதை நன்றியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அத்துடன் நான் தெரிந்துகொண்ட பதவியில் தொடர்ந்து சேவையாற்றக் கிருபைசெய்யுமாறு மன்ருடும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஓர் அடியாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## சிலாப மேற்றிராசனத்தின் புதிய விக்கார் ஜெனறல்

சிலாபமேற்றிராசனத்தின் இரண்டாவது விக்கார்ஜெனறலாக வண. அலெக்சாண்டர் பெர்னுண்டோசுவாமிகள் நியமனம்பெற்றுள்ளார். தற்போது அதன்விக்கார் ஜெனறலாக இருந்துவருகிறவர் மகாவந். மொன்சிஞ்ஞோர் மைக்கேல் பெறேருசுவாமிகளே. புதியவிக்கார் ஜெனறலான வண. அலெக்சாண்டர் பெர்னுண்டோ சுவாமிகள் கண்டியிலே பாப்பசர்குருமடத்தில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றதன்மேல் சிலாபமேற்றிராசனத்தின் பல்வேறுவிசாரணைப்பங்குகளிலும் தொண்டாற்றியபின் தொடர்ந்து படித்தும், கொழும்பிலுள்ள அக்குவைனஸ் சர்வகலாசாலைக் கல்லூரியில் சேர்ந்துபடித்தும் லண்டன் சர்வகலாசாலை பி. ஏ. பட்டம்பெறலாயினர். அதன்மேல்டபிளின்நகரில் எம். ஏ. பட்டமும், கல்வித்துறையில் "டிப்ளோமாவும் முதற்பிரிவிலே பெற்றுக்கொண்டு இலங்கைக்குத் திரும்பியதும் மாதம்பையிலுள்ள சென்செபஸ்ரியன் கல்லூரிஅதிபராக முன்போல் பதவி வகித்தார். அத்துடன் சிலாபமேற்றிராசனத்திலே "கத்தோலிக்க இளந்தொழிலாளர்" இயக்கத்தின் ஞானவிசாரணைக் குரவராயும் இருந்துவரலாயினர். இவர் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் சிறந்தஎழுத்தாளர். அதனால் "கதலிக்மெசஞ்சர்" பத்திரிகையுடன் நெருங்கியதொடர்புகொண்டு அநேககட்டுரைகள் அதற்குவழங்கியிருக்கின்றார்.

## தலைவில்லுத் திருயாத்திரை

தலைவில்லு, சந்தானுள் திருசேத்திரத்திற்குச் செல்லும் யாத்திரிகர்களின் வசதியைமுன்னிட்டு முந்தலஎனும் இடம்வரைக்கும் விசேடபுகையிரத சேவை இம்மாதம் 12-ந்திகதிமுதல் 28-ந்திகதிவரை நடைபெறவிருக்கிறது. இதற்குமுன் இவ்விசேட புகையிரத சேவை சிலாபம்வரையுமே நடைபெற்றுவந்தது. இன்னும் முந்தல் புகையிரதநிலையத்தில் பஸ்சேவையை இணைப்பதற்கும் ஏற்பாடாகியுள்ளது. 25மைலுக்கு மேற்பட்டதூரத்திலிருந்து முந்தலுக்குச்செல்லும் யாத்திரிகர்களுக்கு வழக்கமான புகையிரத-பஸ்வண்டிப் பிரயாணசலாரிலே சலுகைசெய்யப்பட்டுள்ளது.

## வங்கித்தலைவர் இராசிநாமா

மக்கள்வங்கியின் தலைவர் திரு. வின்சன் சுபசிங்கா தனதுபதவியை இராசிநாமாச் செய்திருக்கின்றார். நிதிமந்திரியுடன் ஏதோகொள்கையில் மாறுபட்ட அபிப்பிராயம் ஏற்பட்டமையே—அதாவது கிராமவங்கிகள் ஆரம்பிப்பதை நிறுத்தவேண்டுமென்றும், கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பணம்கொடுப்பதைக் கட்டுப்படுத்தவேண்டுமென்றும் நிதிமந்திரிகூறிய அபிப்பிராயங்களுக்கு அவர்இணங்காமையே இதற்குக்காரணமாகும்.

## நிதிமந்திரி கூறுகின்றார்

"திறைசேரி காலியாயிருக்கிறது; அரசியலிலும், தொழிற்சங்கத்திலும் எனக்குள்ள அனுபவத்தைக்கொண்டு காலியாயிருக்கும்திறசேரியை நிரப்பிச் சகலரும் கண்ணியமான வாழ்க்கை நடத்த உதவுவேன்; வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்க ஆறுவாரகாலம் மட்டுமே எனக்குக்கிடைத்தது; எனக்குமுன்னிருந்த நிதிமந்திரிகளுக்கு இதைத்தயாரிக்க ஆறுமாதகாலம் இருந்தது; புதியவரவு-செலவுத்திட்டத்திலே என்னால் அற்புதங்கள்எதையும் செய்யமுடியாது; பொதுமக்களின் பளுவைக்குறைக்கக்கூடிய வரவு-செலவுத்திட்டமொன்றைத் தயாரிக்க என்னால் இயன்றளவு முயலுவேன்" என்று புகையிரதநிலைய அதிபர்கள் சங்க வருடாந்தவிருந்தில் நிதிமந்திரி டக்றர் என். எம். பெறேரு பேசியிருக்கின்றார்.

## பண்டத்தரிப்பு கிராமசபை

சிறந்த சமூகசேவையாளரான திருமதி பேர்ளி அத்தனுசியார் பண்டத்தரிப்பு, கிராமசபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளாரென அறிந்து சந்தோஷமானோம். இவர் சில்லாலை பிரபல ஆயுள்வேத வைத்திய கலாநிதி பாக்கியநாதன் அத்தனுசியார், ஜே. பி. அவர்களின் பாரியாராவர். ஒரு பெண்மணி கண்ணியமும், பொறுப்பும் வாய்ந்த இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டமை தாய்க்குலத்தோருக்கு மகிமைதருவதொன்றாகும். புதிய தலைவருக்கு எமதுபாராட்டுக்கள்.

## தமிழ்ப்பட்டதாரிகளுக்கு ஆசிரிய பதவி

சிங்களப்பாடசாலைகளில் கல்விபயிற்றுதற்கென்று தமிழ்ப்பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமனஞ்செய்யும் திட்டம்ஒன்றைக் கல்விமந்திரி தயாரித்துள்ளாரெனத் தெரியவருகிறது. இவர்கள் தற்காலிகமாகவே கல்விபயிற்றுவார்கள். குறித்தகாலத்தில் சிங்களத்திற் தேர்ச்சிபெற்றதும் இவர்களின்நியமனம் நிரந்தரமாகும். நிரந்தரமாக்கப்படுமுன் இவர்களுக்கு விசேஷபடி வழங்கப்படும்.

## வற்றாத நீரூற்று

உடுப்பிட்டி வடக்கிலே தோண்டப்பட்ட கிணறுஒன்று வற்றாதநீரூற்றைக் கொண்டிருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. மணித்தியாலம் 8,000 கலன்நீரை இறைக்கக்கூடிய நீரிறைக்கும் ஐந்து இயந்திரங்கள்கொண்டு இறைத்தும் நீர்வற்றாததைக் கண்ட பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம்அவர்கள் இந்தக்கிணற்றிலிருந்து வாய்க்கால்கட்டி விவசாயிகளுக்குத் தண்ணீர் உதவுவதற்கான நடவடிக்கை எடுத்துவருகிறாரென்றும், இது விஷயமாய் மாவட்ட இணைப்புக் கூட்டத்தில் பேசவிருக்கிறாரென்றும் தெரியவருகிறது.

## இதுதான் ஜனநாயகமா?

இன்றைய ஆட்சியமைப்பிலே இலங்கைப் பாராளுமன்றத்தில் 80சதவீதத்துக்கு அதிகமானோர் சிங்களப்பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்; சனத்தொகைப்படி இலங்கையில் 69சதவீதம்தான் சிங்களவர்கள் வாழுகின்றார்கள்; இந்தநிலையிலே இந்தச்சபையில் 123தெரிவுசெய்யப்பட்ட சிங்களப் பிரதிநிதிகள் இருந்துவருகிறார்கள்; இதுதான் ஜனநாயகமா? என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம்அவர்கள் சனப்பிரதிநிதிகள் சபையிலே சென்றவெள்ளிக்கிழமை பேசியபோது சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

## பொலிஸிலிருந்து நீக்கப்பட்டனர்

பொலிஸ்சேவையிலிருந்து கடந்த சிலமாதங்களிலே ஓர்உதவிப் பொலிஸ் சுப்பிறின்ரெண்டன், ஓர்இன்ஸ்பெக்றர், ஒருசார்ஜன், பதினொருபொலிஸ்சேவகர், ஒருவாகனச்சாரதி ஆகியோராய்ப் பதினைந்துபேர் நீக்கப்பட்டுள்ளனர். காரணம், பொதுமக்களைத் தாக்கியது, வேலைநீக்கமானது, அதிருப்தி என்பனவாகும்.

## விரைவில் புகையிரதப்பகுதியும்

நூறுஆண்டுச்சேவையை இவ்வருடத்திலே கண்டுகொள்ளவிருக்கும் இலங்கைப்புகையிரதச்சேவை விரைவிலே ஓர்அரசாங்க கூட்டுத்தாபனமாகவிருக்கிறது. நாட்டின் போக்குவரத்துச்சேவையை மாற்றியமைக்குமாறு போக்குவரத்துமந்திரி நடைமுறைக்குக் கொண்டுவரும் திட்டத்திலே இதுவும் ஒருபகுதியாகும்.

## பொதுத்தேர்தல் நடைபெறுமா?

"ஒருபொதுத்தேர்தலை எதிர்நோக்க ஸ்ரீலங்கா சுதந்திரகட்சிக்குப் பயமோ அன்றேல் வேண்டாவெறுப்போ இல்லை; 1965-ம்ஆண்டிலே பொதுத்தேர்தல் நடைபெறுதெனச் சிலர் கூறியபோதிலும் அடுத்தவருடம் நிச்சயமாகப் பொதுத்தேர்தல் நடந்தே தீரும்; அதுநடந்து மக்கள் ஒருபுதிய அரசாங்கத்தைத் தெரிவுசெய்வதையே நான்ஆசிக்கிறேன்" என்று உணவு-கூட்டுறவுமந்திரி சென்றசனிக்கிழமை தோம்பேத்தொகுதியில் ஒருபுதிய பாடசாலைக் கட்டடத்திறப்புவிழாவில் பேசியிருக்கின்றார்.

## சர்வோதய இயக்கம்

தமிழ்மக்களைச் சிங்களம்படிக்கவும், சிங்களமக்களைத் தமிழ்படிக்கவும் தூண்டுவதான ஒருமுயற்சியிலே இலங்கைச் சர்வோதயஇயக்கம் தற்போது ஈடுபட்டுள்ளது. தமிழர், சிங்களராகிய இருசாகியத்தினரும் அங்கம்வகித்திருக்கும் இந்தஇயக்கம் இருசகோதரமொழிகளையும் படிப்பதென்ற ஒரு பிரேரணையைநிறைவேற்றியிருக்கிறது.

## தமிழில் பதில்கிடைக்கும்

வரியிறுப்பாளருடன் தொடர்புகொண்டிருக்கும் உள்ளூர் வருமான வரிப் பகுதியானது உத்தியோக மொழிச்சட்டத்தைக் கடுமையாக நிறுத்திப்பிடிப்பதில்லையெனத் தீர்மானித்துள்ளது. வரியிறுப்பாளர் எந்த மொழியிலே வருமானவரிப் பகுதியுடன் தொடர்புகொள்ளுகின்றனரோ அதேமொழியில்தான் பதில்அனுப்பப்படும். தங்களுக்குத் தெரியவராத மொழியிலே அனுப்பப்படும் கடிதங்கள்காரணமாக வருமானவரிகட்டுவதில் தாமதமேற்படின் அதற்குத் தாங்கள் பொறுப்பாளிகளல்லவென்று அவர்கள் உள்ளூர் வருமானவரிப்பகுதிக்கு அறிவித்ததைத் தொடர்ந்தே இந்தமுடிவு செய்யப்படலாயிற்று.

## தேர்தல் ஆட்சேபமனு

ஹெவாஹெற்ற தொகுதித் தேர்தல் ஆட்சேபனைமனு விசாரணை வருகிற ஆவணிமாதம் 17-ந்திகதிசெவ்வாய்க்கிழமை நுவரெலி மாவட்ட நீதிஸ்தலத்திலே திரும்பவும் ஆரம்பமாகவிருக்கிறது. சுப்பிறீங்கோட்டு உத்தரவின் பேரிலேயே இப்புதியவிசாரணை நடைபெறவிருக்கிறது. நீதியரசர் திரு. ஏ. டபிள்யு. எச். அபயசுந்தரா விசாரணைநடத்தவிருக்கின்றார். 1960-ம் ஆண்டுஆடிமாதம் முன்சொன்னதொகுதிக்கு வர்த்தகமந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தின தெரியப்பட்டதை ஆட்சேபித்துச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின்பேரிலேயே இவ்விசாரணை திரும்பவும் நடைபெறவிருக்கிறது.

## திடீர்ப்பரிசோதனைகள்

அரசாங்கபகுதிகளில் நிர்வாகச்சீர்கேடுகள், மற்றும்பல ஊழல்கள்பற்றிய புகார்களை விசாரணைசெய்யவென்று உயர்தர அரசாங்க அதிகாரிகளைக் கொண்ட ஒருதிடீர்ப் பரிசோதனைக் குழுவை நிதிமந்திரி நியமிக்கவிருக்கின்றார். அந்தந்த ஸ்தானங்களுக்குநேரில் சென்று பரிசோதனை நடத்தியபின் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையின்மீது அவர் பிரதமராது ஆலோசனையின் பேரிலே நடவடிக்கைஎடுப்பார்.


விவசாய ரசாயன
மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி
மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்



அதிக லாபத்தைப் பெறுங்கள்!

இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய
சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்

விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்

ஓட்டோஸ் லிமிட்டெட்,

தந்தி: "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன்: 496.

கிளை

தந்தி: "AUTOS" வவுனியா. டெலிபோன்: 577.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஆடிமாதம் 18-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org